இணைப்பு—I

(711 ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

கோரிக்கை எண் 22—காவல் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை)

அறிவிப்புகள், 2010—2011

அறிவிப்பு 1

புறக்காவல் நிலையங்களைத் தரம் உயர்த்துதல்

மூன்றாவது காவல் ஆணையம் அளித்த பரிந்துரையின் அடிப்படையில், ஒவ்வொரு ஆண்டும் புறக்காவல் நிலையங்கள் தரம் உயர்த்தப்படுகின்றன. இந்த அரசு பொறுப்பேற்றபோது மாநிலத்தில் 116 புறக்காவல் நிலையங்கள் செயல்பட்டு வந்தன. கடந்த நான்கு ஆண்டுகளில் இவை படிப்படியாக தரம் உயர்த்தப்பட்டு தற்போது 69 புறக்காவல் நிலையங்கள் மட்டும் உள்ளன.

இவற்றில், இந்த ஆண்டு சென்னையில் எப்.7 மகப்பேறு மருத்துவமனை, திருச்சி நகரில் அமர்வு நீதிமன்றம், நாகப்பட்டினம் மாவட்டத்தில் வேட்டைக்காரன் இருப்பு, கோயம்புத்தூர் மாவட்டத்தில் ஆழியார், நீலகிரி மாவட்டத்தில் லவ்டேல், சென்னை (இரயில்வே) மாவட்டத்தில் திருவள்ளூர், ராயபுரம், திருச்சி (இரயில்வே) மாவட்டத்தில், கரூர், திண்டுக்கல், கொடை ரோடு ஆகிய 10 இடங்களில் உள்ள புறக்காவல் நிலையங்கள் முழு அளவிலான காவல் நிலையங்களாக மாற்றப்படும்.

அறிவிப்பு 2

புதிய போக்குவரத்துக் காவல் நிலையங்கள் அமைத்தல்

2010-2011 ஆம் ஆண்டில், காஞ்சிபுரம் மாவட்டத்தில் மதுராந்தகம், வேலூர் மாவட்டத்தில் ஆம்பூர், ஈரோடு மாவட்டத்தில் கோபி, திருப்பூர் மாவட்டத்தில் அவினாசி, மதுரை மாவட்டத்தில் உசிலம்பட்டி, தேனி மாவட்டத்தில் கம்பம், திருநெல்வேலி மாவட்டத்தில் சங்கரன்கோவில், கன்னியாகுமரி மாவட்டத்தில் குளச்சல், கரூர் மாவட்டத்தில் பசுபதிபாளையம், திருச்சி மாவட்டத்தில் துவாக்குடி ஆகிய 10 இடங்களில் புதிய போக்குவரத்துக் காவல் நிலையங்கள் திறக்கப்படும்.

[2010 மே 10

அறிவிப்பு 3

சென்னை ஆணையரகத்தில் காவல் நிலைய மேம்பாடு மற்றும் புதிய காவல் நிலையம் தொடங்குதல்

சென்னையில் புதியதாகக் கட்டப்பட்டுள்ள தலைமைச் செயலகம் மற்றும் சட்டமன்றக் கட்டடப் பகுதியில் அமைந்துள்ள திருவல்லிக்கேணி காவல் நிலையம் கூடுதல் பணியாளர்களுடன் மாற்றியமைக்கப்படும். மேலும், ஒக்கியம் துரைப்பாக்கம், கண்ணகி நகர் பகுதியில் புதிதாக ஒரு காவல் நிலையம் தொடங்கப்படும்.

அறிவிப்பு 4

காவல் நிலையங்களுக்கான புதிய கட்டடம் கட்டுதல்

சட்டத் துறை அமைச்சர் திரு. துரைமுருகன், உணவுத் துறை அமைச்சர் திரு. எ. வ. வேலு, நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் திரு. வெள்ளக்கோவில் சாமிநான், கதர்த் துறை அமைச்சர் திரு. கா. இராமச்சந்திரன், சட்டமன்ற உறுப்பினர்கள் திரு. என்.கே.ஆர். சூரியகுமார், திரு. ஆர்.எம். பழனிசாமி, திரு. பாளை அமரமூர்த்தி ஆகியோரது கோரிக்கைகளை ஏற்று, வேலூர் மாவட்டத்தில் நாட்ராம்பள்ளி, வேப்பங்குப்பம், திருவண்ணாமலை மாவட்டத்தில் ஆரணி (தாலுக்கா), ஈரோடு மாவட்டத்தில் மலையம்பாளையம், நீலகிரி மாவட்டத்தில் நடுவட்டம், அரியலூர் மாவட்டத்தில் திருமானூர் ஆகிய இடங்களில் உள்ள காவல் நிலையங்களுக்குப் புதிய கட்டடம் கட்டப்படும்.

அறிவிப்பு 5

வாடகைக் கட்டடங்களில் இயங்கி வரும் காவல் நிலையங்களுக்குச் சொந்தக் கட்டடம் கட்டுதல்

மூன்றாவது காவல் ஆணையத்தின் பரிந்துரையின்படி, வாடகைக் கட்டடங்களில் இயங்கி வரும் காவல் நிலையங்களுக்குச் சொந்தக் கட்டடம் கட்ட படிப்படியாக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அதன் அடிப்படையில், சட்டமன்ற உறுப்பினர் திரு. விடியல் எஸ். சேகர் அவர்களின் கோரிக்கையினை ஏற்று, ஈரோடு மாவட்டத்தில் சென்னிமலை மற்றும் கோயம்புத்தூர் நகரத்தில் வி.எச்.சாலை,

2010 மே 10]

கோயம்புத்தூர் மாவட்டத்தில் கேஜி. சாவடி, வேலூர் மாவட்டத்தில் விரிஞ்சிபுரம், அரக்கோணம் (அனைத்து மகளிர் காவல் நிலையம்), புதுக்கோட்டை மாவட்டத்தில் செம்பட்டி விடுதி, நாகப்பட்டினம் மாவட்டத்தில் புதுப்பட்டினம், திண்டுக்கல் மாவட்டத்தில் வடமதுரை (அனைத்து மகளிர் காவல் நிலையம்), தேனி மாவட்டத்தில் பழனிச்செட்டிப்பட்டி, மயிலாடும்பாறை, கோம்பை, ஓடப்பட்டி, இராமநாதபுரம் மாவட்டத்தில் மண்டலமாணிக்கம், கீழக்கரை (அனைத்து மகளிர் காவல் நிலையம்), சிவகங்கை மாவட்டத்தில் பூவந்தி, நாச்சியார்புரம், திருநெல்வேலி மாவட்டத்தில் ஆழ்வார்குறிச்சி, பாப்பாக்குடி, தூத்துக்குடி மாவட்டத்தில் தாளமுத்து நகர், திருவைகுண்டம் (அனைத்து மகளிர் காவல் நிலையம்), கன்னியாகுமரி மாவட்டத்தில் பளுகல் ஆகிய 21 காவல் நிலையங்களுக்கு நடப்பாண்டில் புதிய கட்டடங்கள் கட்டப்படும்.

அறிவிப்பு 6

காவல் துறை துணைக் கண்காணிப்பாளர்களுக்கான அலுவலகக் கட்டடம் கட்டுதல்

சட்டமன்ற உறுப்பினர்கள் திரு. தா. உதயசூரியன், திரு. விடியல் எஸ். சேகர் ஆகியோரின் கோரிக்கைகளை ஏற்று, விழுப்புரம் மாவட்டத்தில் கள்ளக்குறிச்சி, திருப்பூர் மாவட்டத்தில் காங்கேயம் ஆகிய இடங்களிலும், இவை தவிர மதுரை மாவட்டத்தில் மேலூர், திண்டுக்கல் மாவட்டத்தில் வேடசந்தூர், திருநெல்வேலி மாவட்டத்தில் சேரன்மாதேவி, கிருஷ்ணகிரி மாவட்டத்தில் தேன்கனிக்கோட்டை ஆகிய 6 இடங்களில் காவல் துறை துணைக் கண்காணிப்பாளர்களுக்கான இல்லத்துடன் கூடிய முகாம் அலுவலகம் கட்டப்படும்.

அறிவிப்பு 7

காவல் நிலையங்களில் அடிப்படை வசதிகள் அமைத்தல்

மாநிலத்திலுள்ள, பின்வரும் 30 காவல் நிலையங்களுக்கு, அடிப்படை வசதிகளான கழிப்பிடம், ஆண் மற்றும் பெண் குற்றவாளிகளுக்கான தனிக் காவல் சிறை, குடிநீர் வசதி போன்றவை செய்து கொடுக்கப்படும்.

[2010 மே 10

வ. எண்	மாவட்டம்	இடம்
1	இராமநாதபுரம்	ஆர். எஸ். மங்கலம்
2	கன்னியாகுமரி	கீரிப்பாறை
3		நாகர்கோவில் (அ.ம.கா.நி.)
4	கோயம்புத்தூர்	கிணற்றுக்கடவு
5		ஆனைமலை
6		அன்னூர்
7		சூலூர்
8		கருமத்தம்பட்டி
9		காமநாயக்கன்பாளையம்
10	ஈரோடு	மலையம்பாளையம்
11	ஈரோடு	வரப்பாளையம்
12	சென்னை மாநகர்	W26 அசோக்நகர்
13		வடபழனி
14		F3 நுங்கம்பாக்கம்
15		J8 நீலாங்கரை
16		W9 வில்லிவாக்கம்
17	சென்னை புறநகர்	ஆவடி (அ.ம.கா.நி.)
18		அம்பத்தூர் எஸ்டேட்
19	கிருஷ்ணகிரி	பர்கூர் (அ.ம.கா.நி.)
20		ஓசூர் (அ.ம.கா.நி.)
21	மதுரை	சமயநல்லூர் (அ.ம.கா.நி.)
22	தூத்துக்குடி	கடம்பூர் (அ.ம.கா.நி.)

தமிழ்நாடு சட்டமன்றம் TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2010 மே 10]

23	கடலூர்	சிதம்பரம் (நகரம்)
24.	திருச்சி	லால்குடி (அ.ம.கா.நி.)
25	காஞ்சிபுரம்	சதுரங்கப்பட்டினம்
26	திருவள்ளூர்	திருவள்ளூர் (நகரம்)
27	வேலூர்	சோளிங்கர்
28		ஆலங்காயம்
29	திருவண்ணாமலை	கீழ்பெண்ணாத்தூர்
30	திருவாரூர்	கொரடாச்சேரி

அறிவிப்பு 8

தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வுக் குழும அலுவலகத்திற்குக் கட்டடம் கட்டுதல்

தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வுக் குழுமம், தற்போது வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகிறது. எழும்பூரிலுள்ள, சென்னை மாநகரக் காவல் ஆணையாளர் அலுவலக வளாகத்தில், இந்தக் குழுமத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டப்படும்.

அறிவிப்பு 9

இரண்டாம் நிலைக் காவலர் பணி நியமனம் செய்தல்

இந்த அரசு பொறுப்பேற்றபின், கடந்த நான்கு ஆண்டுகளில், 15,084 காவலர் பணியிடங்கள் நிரப்பப்பட்டுள்ளன. தற்போது 9,000 காவலர் பணியிடங்களை நிரப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதனையடுத்து, 2010-2011 ஆம் ஆண்டில் தமிழ்நாடு சீருடைக் காவல் பணியாளர் தேர்வுக் குழுமம்மூலம் 5,588 இரண்டாம் நிலைக் காவலர்கள் தேர்வு செய்யப்படுவார்கள்.

அறிவிப்பு 10

காவல் உதவி ஆய்வாளர் பணி நியமனம் செய்தல்

தமிழ்நாடு சீருடைக் காவல் பணியாளர் தேர்வுக் குழுமத்தின்மூலம், 2010-2011 ஆம் ஆண்டில், 717 காவல் உதவி

[2010 மே 10

ஆய்வாளர்கள் மற்றும் 115 காவல் உதவி ஆய்வாளர்கள் (தொழில் நுட்பம்) தேர்வு செய்யப்படுவார்கள்.

அறிவிப்பு 11

ஓட்டுநர் காவலர் பணியிடங்கள் உருவாக்குதல்

காவல் துறையில், புதியதாக வழங்கப்படும் வாகனங்களை ஓட்டுவதற்கான ஓட்டுநர் பணியிடங்கள் அவ்வப்போது உருவாக்கப்படுவதில்லை. இதனால், பல்வேறு இடங்களில், காவலர்கள் இந்தப் பணியைச் செய்து வருகிறார்கள். இதனை மனதில் கொண்டு, 2010-2011 ஆம் ஆண்டில் 1,000 ஓட்டுநர் காவலர் பணியிடங்கள் புதியதாக உருவாக்கப்படும்.

அறிவிப்பு 12

திருப்பூர் மாவட்டத்திற்குக் கூடுதல் பணியிடங்கள் உருவாக்குதல்

புதியதாக தொடங்கப்பட்ட திருப்பூர் காவல் மாவட்டத்திற்கு கூடுதலாக 106 பணியிடங்கள் அனுமதிக்கப்படும்.

அறிவிப்பு 13

விரல் ரேகைப் பதிவுக் கூடங்களுக்குக் கணினி வசதி செய்தல்

மாநிலத்திலுள்ள 37 விரல் ரேகைப் பதிவுக் கூடங்களின் செயல்பாட்டினை மேம்படுத்த, கணினி மற்றும் புகைப்படக் கருவிகள் வழங்கப்படும்.

அறிவிப்பு 14

காவல் நிலையங்களைத் தலைமையிடத்திற்கு இணைக்கும் இணையதளச் சேவையை மேம்படுத்துதல்

கடந்த 2008-2009 ஆம் ஆண்டு, இந்த மன்றத்தில் அறிவித்ததன் அடிப்படையில், காவல் நிலையங்களுக்கு அகண்ட அலை வரிசை (Broad band) வசதி செய்து தரப்பட்டுள்ளது. காவல் இணையதளம் மூலம் அவை தொடர்புகொள்ள 'நடைமுறை தனியார் வலைப் பின்னல் இயக்கம்' (VPN) பயன்படுத்தப்பட்டு வருகிறது. இதற்காக, 2 Mbps திறனுள்ள வலைக் கம்பிமூலம் காவல்

தலைமையிடத்திலிருந்து இணையதள சேவை இணைக்கப்பட்டுள்ளது. இதனை 34 Mbps திறனுள்ள வலைக் கம்பியாக மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.

மேலும், நீண்ட காலத் தீர்வாக வானொலித் தொலைத் தொடர்பு மூலம் காவல் துறையிலுள்ள அனைத்து அலுவலகங்களையும் இணைக்க, சோதனை முயற்சியாக, ஒரு மாவட்டத்திற்கு கம்பியில்லா வானொலி மூலம் வலைப் பின்னல் தொடர்புகள் ஏற்படுத்தப்படும்.

அறிவிப்பு 15

காவல் கணினிப் பிரிவு மற்றும் குற்றமுறைக் கண்டுபிடிப்புப் பிரிவு ஆகியவற்றைக் கணினி மயமாக்குதல்

நடப்பாண்டில், மாநில குற்ற ஆவணக் காப்பகத்தில் உள்ள காவல் கணினிப் பிரிவிற்கும், குற்றமுறை கண்டுபிடிப்புப் பிரிவிற்கும் கணினி மற்றும் தொடர்புடைய கருவிகள் அளிக்கப்படும்.

அறிவிப்பு 16

குற்றப் புலனாய்வுத் துறை மற்றும் திருச்சி மற்றும் மதுரை நகரங்களில் சைபர் (CYBER) குற்றப் பிரிவு ஏற்படுத்துதல்

திருச்சி மற்றும் மதுரை நகரங்களில் சைபர் குற்றப் பிரிவு உருவாக்கப்பட்டு, சென்னையிலுள்ள குற்றப் புலனாய்வுத் துறையின் ஒரு காவல் கண்காணிப்பாளர் தலைமையில், சென்னைப் புறநகர், கோயம்புத்தூர், மதுரை, திருச்சி ஆகிய நகரங்களிலுள்ள சைபர் குற்றப் பிரிவுகளை மேற்பார்வையிட வழிவகை செய்யப்படும்.

அறிவிப்பு 17

மதுரை மற்றும் கோயம்புத்தூர் ஆணையரகங்களில் டெட்ரா 2 வானொலி வசதி ஏற்படுத்துதல்

2010-2011 ஆம் ஆண்டில் ரூ.428 இலட்சம் மதிப்பில் மதுரை மற்றும் கோயம்புத்தூர் ஆணையரகங்களில் தொலைத் தொடர்பு வசதிகளை மேம்படுத்த டெட்ரா 2 (Tetra 2 trunked) வானொலி வசதி செய்து கொடுக்கப்படும்.

[2010 மே 10

அறிவிப்பு 18

தமிழ்நாடு காவல் உயர் பயிற்சியகத்தில் கூடுதல் வசதிகள் செய்தல்

தற்போது ஊனமாஞ்சேரியில் உள்ள காவல் உயர் பயிற்சியகத்தில், 800 பயிற்சி ஆய்வாளர்களுக்குப் பயிற்சி அளித்திடப் போதுமான வசதிகள் செய்யப்பட்டுள்ளன. இனி வரும் ஆண்டுகளில், ஆண்டுதோறும் உதவி ஆய்வாளர் காலிப் பணியிடங்கள் சுமார் 1,000-க்கும் மேற்பட்டிருக்கும் என்பதால், இவர்களுக்குப் பயிற்சி அளிக்கும்பொருட்டு, தமிழ்நாடு காவல் உயர் பயிற்சியகத்தில் கூடுதல் வசதிகள் செய்யப்படும்.

13-வது மத்திய நிதிக் குழு, காவலர் பயிற்சிக்காக 2011-2012 ஆம் ஆண்டிலிருந்து நான்கு ஆண்டுகளுக்கு ஒவ்வொரு ஆண்டும் தலா ரூ. 25 கோடி ஒதுக்கியுள்ளது. இந்த நிதியைக் கொண்டு, தமிழ்நாடு காவல் உயர் பயிற்சியகத்தில், 1,200 உதவி ஆய்வாளர்களுக்குப் பயிற்சி அளிக்க கூடுதல் வசதிகள் செய்ய, இந்த ஆண்டு ஆரம்பகட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு, வரும் ஆண்டில் செயல்படுத்தப்படும். இதேபோல், தூத்துக்குடி மாவட்டம், பேரூரணியில் உள்ள காவலர் பயிற்சிப் பள்ளிக்கு ரூ. 2 கோடி அளவில் கூடுதல் வசதிகள் செய்யப்படும்.

அறிவிப்பு 19

காவல் நிலையங்கள் தரம் உயர்த்துதல்

மூன்றாவது காவல் ஆணையம் செய்த பரிந்துரையின் அடிப்படையில், காவல் நிலையங்களின் வகைப்பாடு சிறு, நடுத்தரம், முழு அளவு என்ற வகையில் மாற்றியமைக்கப்பட்டு, சிறு காவல் நிலையங்களுக்கு 30 பணியாளர்கள் எனவும், நடுத்தரக் காவல் நிலையங்களுக்கு 50 பணியாளர்கள் எனவும், முழு அளவு காவல் நிலையங்களுக்கு 80 பணியாளர்கள் எனவும் அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. இதன் அடிப்படையில், ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள காவல் நிலையப் பணியாளர்களின் எண்ணிக்கையை உயர்த்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு, இந்த ஆண்டில் விழுப்புரம் மாவட்டத்திற்கு 692 புதிய பணியிடங்களும், திருநெல்வேலி மாவட்டத்திற்கு 1,008 புதிய பணியிடங்களும், சிவகங்கை மாவட்டத்திற்கு 404 புதிய பணியிடங்களும், தேனி மாவட்டத்திற்கு 492 புதிய பணியிடங்களும், தூத்துக்குடி

2010 மே 10]

மாவட்டத்திற்கு 560 புதிய பணியிடங்களும், அரியலூர் மாவட்டத்திற்கு 223 புதிய பணியிடங்களும், திருப்பூர் மாவட்டத்திற்கு 622 புதிய பணியிடங்களும், ஆக மொத்தம் 4,001 புதிய பணியிடங்கள் கூடுதலாக உருவாக்கப்பட்டு, இம்மாவட்டங்களிலுள்ள காவல் நிலையங்கள் தரம் உயர்த்தப்படும்.

அறிவிப்பு 20

சென்னை காவல் ஆணையரகத்திற்குட்பட்ட காவல் நிலையங்களை வகைப்பாடு செய்தல்

சென்னை காவல் ஆணையரகப் பகுதியில், தற்போது 89 காவல் நிலையங்கள் உள்ளன. சென்னை மாநகரத்தின் சிறப்புத் தேவைகளைக் கருத்தில் கொண்டு, மாநிலத்தின் பிற பகுதிகளிலுள்ள காவல் நிலைய வகைப்பாடு மற்றும் அலுவலர்களின் எண்ணிக்கை சென்னைக்குப் பொருத்தமாக இருக்காது என்பதால், சென்னை காவல் ஆணையரகப் பகுதியிலுள்ள காவல் நிலையங்கள், பின்வரும் அடிப்படையில் இரண்டு ஆண்டுகளில் மாற்றி வகைப்படுத்தப்படும்.

பெருநகர் வகை - I : இந்த வகைக் காவல் நிலையங்களுக்கு 120 காவல் பணியாளர்கள் ஒதுக்கீடு செய்யப்படுவர்.

பெருநகர் வகை - II : இந்த வகைக் காவல் நிலையங்களுக்கு 100 காவல் பணியாளர்கள் ஒதுக்கீடு செய்யப்படுவர்.

மொத்தமுள்ள காவல் நிலையங்களில், 50 விழுக்காட்டிற்கு மிகாமல், பெருநகர் வகை I ஆக வகைப்படுத்தப்படும்.

அறிவிப்பு 21

அதிவேகமாகச் செல்லும் வாகனங்களைக் கண்காணிக்க புகைப்படக் கருவி பொருத்தி விபத்துகளைக் குறைப்பதற்கான நடவடிக்கை

தமிழகத்தில் பெரும்பாலான சாலை விபத்துகள் தேசிய நெடுஞ்சாலைகளில் நடப்பதைக் கருத்தில்கொண்டும், விபத்துகளுக்கான காரணம் வாகனங்களை அதிவேகமாக ஓட்டிச்செல்வது என்பதைக் கருத்தில்கொண்டும், வாகன விபத்துகள்

[2010 மே 10

அதிக அளவில் நடக்கும் செங்கல்பட்டு முதல் திண்டிவனம் வரையிலான ஏறத்தாழ 80 கிலோமீட்டர் தூரத்திற்கு தேசிய நெடுஞ்சாலையில் கண்காணிப்புப் புகைப்படக் கருவிகள் பொருத்தப்பட்டு, அதிக வேகமாகச் செல்லும் வாகனங்களைக் கண்டறிந்து நடவடிக்கை எடுக்கும் திட்டம் செயலாக்கப்படும்.

அறிவிப்பு 22

நுண்ணறிவுப் பிரிவு (Organised Crime Intelligence Unit) அமைத்தல்

பயங்கரவாதிகள் தொடர்பான குற்றங்களைக் கட்டுப்படுத்த, திட்டமிட்ட குற்றங்கள் நுண்ணறிவுப் பிரிவு மாநிலத்தில் அமைக்கப்படும்.

அறிவிப்பு 23

காவலர் குடியிருப்புகள் கட்டுதல்

கடந்த 2006-2007 முதல் 2009-2010 வரை, நான்கு ஆண்டுகளில், 9,000 காவலர் குடியிருப்புகள் கட்டுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

உணவுத் துறை அமைச்சர் திரு. எ.வ. வேலு, அரசுக் கொறடா திரு. அர. சக்கரபாணி, சட்டமன்ற உறுப்பினர் திரு. என்.கே.ஆர். சூரியகுமார், முன்னாள் அமைச்சர் திரு. செ. மாதவன் ஆகியோரின் கோரிக்கைகளின் அடிப்படையில், திருவண்ணாமலை மாவட்டத்தில் ஆரணி, திண்டுக்கல் மாவட்டத்தில் கீரனூர், சத்திரப்பட்டி, வேலூர் மாவட்டத்தில் நாட்ராம்பள்ளி, சிவகங்கை மாவட்டத்தில் சிங்கம்புணரி உட்பட மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் 2000 குடியிருப்புகள் கட்டப்படும்.

அறிவிப்பு 24

தரவுப் பதிவாளர்களுக்கு (Data Entry Operators) கால முறை ஊதியம் வழங்குதல்

காவல் துறையில், கருணை அடிப்படையில், தொகுப்பூதியத்தில் நியமிக்கப்பட்ட 650 தரவுப் பதிவாளர்களுக்கு, 2007 ஆம் ஆண்டில் இந்த அரசால் கால முறை ஊதியம் வழங்கப்பட்டது.

2010 மே 10]

அதன் பிறகு நியமிக்கப்பட்ட 155 தரவுப் பதிவாளர்கள் (Data Entry Operators) தொகுப்பூதியம் பெற்று வருவதால், அவர்களுக்கு 1-7-2010 முதல் கால முறை ஊதியம் வழங்கப்படும்.

அறிவிப்பு 25

தமிழ்நாடு சிறப்புக் காவல் படை அணிகளில் பணிபுரியும் தொழிலாளர்களுக்குக் காலமுறை ஊதியம் வழங்குதல்

தமிழ்நாடு சிறப்புக் காவல் படை அணிகளில் பணிபுரியும் தொழிலாளர்களில், சமையலர் மற்றும் சிகை அலங்காரம் செய்யும் 80 தொழிலாளர்கள், தற்போது மாதமொன்றுக்கு தொகுப்பூதியம் ரூ.1,500 பெற்று வருகிறார்கள். இந்த 80 பணியாளர்களுக்கும், வரும் 1-7-2010 முதல் ரூ.1,300 நிலை ஊதியத்துடன் (Grade Pay) கூடிய காலமுறை ஊதியம் ரூ.4800-10000 நிர்ணயம் செய்யப்படும்.

அறிவிப்பு 26

காவல் பணியாளர்களுக்கு மிகை நேர ஊதியம் உயர்த்தி வழங்குதல்

காவல் பணியாளர்களுக்கு மிகை நேர ஊதியம் ரூ.150 வழங்கப்படுகிறது. காவலர்களின் பணிச் சுமையைக் கருத்தில் கொண்டு, மிகை நேர ஊதியம் நாளொன்றுக்கு ரூ. 200 ஆக உயர்த்தப்பட்டு, வரும் 1-7-2010 முதல் வழங்கப்படும்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS